கடம்வியல்பழுவங்கட்சி குறும்பொறை, கடறுகாந்தாரம டவிகான்வநங், ககநங் காண்டங்கட்சிமுளரி,சுரமத்தமாரணியங் கானங்களரி, சீரணிபொச்சைவிடர்தில்லங்காடே.

(அஎ) சூ.

முதையிலையுதிர்வு பிறங்கிய முதுகாடே.

(அஅ) சூ.

பொச்சையுஞ் சுரமும் பொதிகரிகாடே.

(அகூ) சூ.

அரணிளை காவற்காடென வறைவர்.

(கூ0) சூ.

ஓருமரமொருபெயருளைக் குங்கிளவி,வரைவிலவென்மறுர்வள்ளியோரே.

(கூக) சூ.

இறும்பேமிடைதூறு.

(கூஉ) சூ.

இண்டையிங்கை.

(கூங) சூ.

முண்டகமுள்ளுடைமூலமென்ப.

பெயர்ப்பிரிவு.

நந்தநவநத்தின்பெயர்.

பொழில்-கா-தோட்டம்-துடவை-உய்யாநம்-சோலை-வநம்-உத்தியாநம்-தண்டலை-காநம்-அடவி. ஆ யக.

காட்டின்பெயர்.

கடம்-வியல்-பழுவம்-கட்சி-குறும்பொறை-கடறு-காந்தாரம்-அடவி-கான்-வநம்-ககநம்-காண்டம்-கட்சி-முளரி-சுரம்-அத்தம்-ஆரணியம்-கானம்-களரி-பொச்சை-விடர்-தில்லம். ஆ உங.

இலையுதிர்ந்தமுதுகாட்டின் பெயர்.

முதை. (க)

கரிகாட்டின்பெயர்.

பொச்சை-சுரம்-பொதி. ஆ ங.

காவற்காட்டின்பெயர்.

அரண்-இளை. ஆ உ.

ஒவ்வொருமரத்தினை யுணர்த்துமொவ்வொரு பெயர்களையுஞ் சொல்லப்புகினளவுபடாவென்பர்புலவர்.

தூற்றின்பெயர்.

இறும்பு. (க)

இண்டையின்பெயர்.

ஈங்கை. (க)

முள்ளுடைமூலத்தின்பெயர்.

முண்டகம். (க)

சூத்திரம்.

(கூச)

கண்டகங்கடுவே முள்ளெனக்கருதுவர்.

(கூரு) சூ.

ஆசினிகரியேயரியேவைரஞ், சேகேமரத்தின்காழெனச்செப்புவர்.

(கூசா) சூ.

வேத்திரஞ்சாதி சூரல் பிரம்பே.

(கூஎ) சூ.

அகக்காழ்வன்மர மாண்மரமாகும், அவைகருங் காலி முதலாயுள்ளன.

(கூஅ) சூ.

புறக்காழ்வன்புல் பெண்மரமாகும், அவைதாம்- தெரிக்கிற் பனைகமுகுதெங்குமூங்கில்.

(கூகூ) சூ.

முருக்குநார்பான்மரமுதலாயின, வெளிறலிமரமெனும்விகற்பம்பெறுமே.

(௱) சூ.

அறலேபதுக்கை சிறுதூறு[ம்.]

(௱க) சூ.

புல்லுமரனும்புதலும் பூடும், வல்லியும்பெயர்க்கொடைமருந்தெனப்படுமே.

(௱உ) சூ.

தைத்தவத்திரஞ்சத்திரந்தணிக்கு, மெய்த்தநன்மருந்தேசல்[லியகரணி.]

(௱ங) சூ.

துண்டமானவுறுப்புத் துணியிணைச், சந்துசெய்மருந்தேசந்தாநகரணி.

வ

பெயர்ப்பிரிவு.

முள்ளின்பெயர்.

கண்டகம்-கடு. ஆ உ.

மரக்காழின்பெயர்.

ஆசினி-கரி - அரி - வைரம்-சேகு. ஆ ரு.

பிரம்பின்பெயர்.

வேத்திரம்-சாதி-சூரல். ஆ ங.

ஆண்மரத்தின்பெயர்.

அகக்காழ்-வன்மரம். ஆ உ.

அவையாவனகருங்காலிமுதலாயுள்ளன.

பெண்மரத்தின்பெயர்.

புறக்காழ்-வன்புல். ஆ உ.

அவையாவன- பனைகமுகுதெங்குமூங்கிலாம்.

அலிமரத்தின்பெயர்.

வெளிறு. (க)

அவையாவனமுருக்குநாரும்பாலுமுள்ளமரமுதலாயினவு[மாம்.]

சிறுதூற்றின்பெயர்.

அறல்-பதுக்கை. ஆ உ.

மருந்தெனும்பெயர்.

புல்-மரம்-புதல்-பூடு-வல்லி. இவற்றிற்குரித்து.

அத்திரசத்திரந்தைத்தபுண்மாற்றுமருந்தின்பெயர்.

சல்லியகரணி. (க)

துணிபட்டவுறுப்பிணைப்பொருத்துமருந்தின்பெயர்.

சந்தாநகரணி. (க)

வ

சூத்திரம்.

(௱௩)

வீரணமுந்தழும்பு நீக்கிமெய்யினைத், தகைமை செய்மருந்தேசமநியகரணி.

(௱௪) சூ.

உயிர்தருமருந்தே மிருதசஞ்சீவநி.

(௱௫) சூ.

பிள்ளைகுழவி கன்றுபோத்தெனக், கொள்பமரமுதலிளைமைப்பெயர்க்கொடை.

(௱௬) சூ.

நெல்லும்புல்லுநேராரான்டே.

(௱௭) சூ.

பொங்கர்காம்புசாகையுறுப்புக், கோடுபிறக்கஞ்சினைபணையுலவை, கொடாரம்விடபந்தருமரக்கொம்பே.

(௱௮) சூ.

உலவைதழையே.

(௱௯) சூ.

வளாரிளங்கொம்பே.

(௱௰) சூ.

பத்திரமோலைபாசடைதண்ணடை, சாகந்தமாலந்தழைபாசிலையடை, பேசியபன்னமிலையெனப்படுமே.

(௱௰௧) சூ.

வல்லரிகுழைமுறிமஞ்சரிகிசல்யம், பல்லவமலங்கல்கிளைதளிராகும்.

பெயர்ப்பிரிவு.

விரணந்தழும்புகளைநீக்குமருந்தின்பெயர்.

சமநியகரணி. (௧)

உயிர்தருமருந்தின்பெயர்.

மிருதசஞ்சீவநி. (௧)

மரமுதலிளமையின் பெயர்

பிள்ளை-குழவி-போத்து. ஆ ௩.

அவ்விளமைப்பெயர்.

நெல்லும்புல்லும்பெறு.

மரக்கொம்பின்பெயர்.

பொங்கர்-காம்பு-சாகை-உறுப்பு-கோடு-பிறக்கம்-சினை-பணை-உலவை-கோடரம்-விடபம்-தரு. ஆ ௰௨.

தழையின்பெயர்.

உலவை. (௧)

இளங்கொம்பின்பெயர்.

வளார். (௧)

இலையின்பெயர்.

பத்திரம்-ஓலை-பாசடை-தண்ணடை-சாகம்-தமாலம்-தழை-பாசிலை-அடை-பன்னம். ஆ ௰.

தளிரின்பெயர்.

வல்லரி-குழை-முறி-மஞ்சரி-கிசலயம்-பல்லவம்-அலங்கல்-கிளை. ஆ அ.

சூத்திரம்.

(ாயஉ) ———

இலிர்த்தலுஞ் சிலிர்த்தலுங்
குழைத்தலுந்தளிர்த்தல்.

(ாயங) சூ.

முருந்தே முதலிற் செறிவெ
ண்குருத்தே.

(ாயச) சூ.

தொத்துமிணருந் துணருமஞ்சரியுங், கொத்தின் ஞெடர்ச்
சியைக்கூறுங்கிளவி.

(ாயரு) சூ.

பசுங்காய்த்திவிளி.

(ாயசா) சூ.

பலங்கனிபழமே.

(ாயஎ) சூ.

பயினேபாலினுட் படுகுரு
த்தே.

(ாயஅ) சூ.

பிசினே ஆனிவெட்டுக் குரு
த்தே.

(ாயகூ) சூ.

வலம்புரிநந்தியாவர்த்தமா
கும்.

(ாஉய) சூ,

கஞ்சங்குல்லைகஞ்சாவாகும்.

(ாஉக) சூ.

சிந்துவாரநீர்க் குண்டிநொ
ச்சி.

(ாஉஉ) சூ.

காந்தடோன்றிபற்றைகோட
லென், ருய்ந்தநான்குங் காந்த
ளாகும்.

பெயர்ப்பிரிவு.

தளிர்த்தலின்பெயர்.

இலிர்த்தல் - சிலிர்த்தல் - குழைத்தல். ஆ ங.

அடிவெண்குருத்தின்பெயர்.

முருந்து. (க)

கொத்தின்பெயர்.

தொத்து - இணர் - துணர் - மஞ்சரி. ஆ ச.

பசுங்காயின்பெயர்.

திவிளி. (க)

பழத்தின்பெயர்.

பலம் - கனி. ஆ உ.

பாலினுட்படுகுருத்தின்
பெயர்.

பயின். (க)

வெட்டுக்குருத்தின்பெயர்.

பிசின் - ஆனி. ஆ உ.

நந்தியாவர்த்தத்தின்பெயர்.

வலம்புரி. (க)

கஞ்சாவின்பெயர்.

கஞ்சம் - குல்லை. ஆ உ.

நொச்சியின்பெயர்.

சிந்துவாரம் - நீர்க்குண்டி - ஆ உ.

காந்தளின்பெயர்.

காந்தள் - தோன்றி - பற்றை - கோடல். ஆ ச.

சூத்திரம்.

(௩௨௩) ———
காந்தடோன்றி பற்றை செ
ங்காந்தள்.

(௩௨௪) சூ.
வெண்காந்தள் செங்காந்த
ளென்றிருவிகற்பமுங்,கொண்
டேவழங்குங் கோடைப்பெய
ரே.

(௩௨௫) சூ.
உந்மத்தமத்த மூமத்தைப்
பெயரே.

(௩௨௬) சூ.
எரண்டமாமணக்கு.

(௩௨௭) சூ.
கோரண்டங்குறிஞ்சி.

(௩௨௮) சூ.
கரவீரமலரிகணவீரமுமாம்.

(௩௨௯) சூ.
செச்சைசிந்தூரம் வெட்சி
யாகும்.

(௩௩௰) சூ.
உழிஞைசிறுபூளை யெனவு
ரைத்தனரே.

(௩௩௧) சூ.
பரியேபன்னல்கார்ப்பாசம்
பருத்தி.

(௩௩௨) சூ.
திப்பிலிகாமஞ்சிறுமூலகமே.

(௩௩௩) சூ.
துளசிகுல்லை துளபம்வரந்து
ழாய்.

(௩௩௪) சூ.
மரீசிகறியிவைமிளகெனவை
ப்பர்.

பெயர்ப்பிரிவு.

செங்காந்தளின்பெயர்.
காந்தள்-தோன்றி-பற்றை. ஆ ௩.

கோடையென்னும்பெயர்.
செங்காந்தள்வெண்காந்தளி
ரண்டிங்கும்வழங்குவது.

உமத்தையின்பெயர்.
உந்மத்தம்-மத்தம். ஆ ௨.

ஆமணக்கின்பெயர்.
எரண்டம். (௧)

குறிஞ்சியின்பெயர்.
கோரண்டம். (௧)

அலரியின்பெயர்.
கரவீரம்-கணவீரம். ஆ ௨.

வெட்சியின்பெயர்.
செச்சை-சிந்தூரம். ஆ ௨.

சிறுபூளையின்பெயர்.
உழிஞை. (௧)

பருத்தியின்பெயர்.
பரி - பன்னல் - கார்ப்பாச
ம். ஆ ௩.

திப்பிலியின்பெயர்.
காமன்-சிறுமூலகம். ஆ ௨.

துளசியின்பெயர்.
குல்லை-துளபம்-வரம்-து
ழாய். ஆ ௪.

மிளகின்பெயர்.
மரீசி-கறி. ஆ ௨.

சூத்திரம்.

(௩௩௫) ——
மஞ்சளரிசநம்.

(௩௩௬) சூ.
கந்தங்கருணை.

(௩௩௭) சூ.
சூாசஞ்சிறுகிழங்காகுமென் [ப.

(௩௩௮) சூ.
தகரந்தக்கோலங்கோட்டஞ் சாதிக்கா, யிலவங்கமாஞ்சிகச் சோல்மேல மெனப், பகரும் வாசந்தருபண்டப்பெயரே.

(௩௩௯) சூ
* மூலகந்தம்பூதகத்தொடு, வேரியிருவேலிவெட்டிவேரெ [ன்ப.

(௩௪0) சூ
* வேர்வாசமிலாமிச்சைமே லாகும்மே.

(௩௪௧) சூ.
கடிப்பகையையவி கடுகின் பெயரே.

(௩௪௨) சூ.
உருளரிசிகொத்து மலியெ னவுரைப்பர்.

(௩௪௩) சூ.
கழங்கேமூழல்.

(௩௪௪) சூ.
கொடிக்கழலாகும்.

(௩௪௫) சூ.
பகன்றைகிலுகிலுப்பை.

(௩௪௬) சூ.
சகுடஞ்சேம்பே.

சி

பெயர்ப்பிரிவு.

மஞ்சளின்பெயர்.
அரிசநம். (௧)

கருணையின்பெயர்.
சந்தம். (௧)

சிறுகிழங்கின்பெயர்.
சூாசம். (௧)

வாசந்தருபலபண்டத்தின் பெயர்.
தகரம்-தக்கோலம்-கோட்டம்-சாதிக்காய் - இலவங்கம்-மாஞ்சி-கச்சோலம்-எலம். ஆ அ.

வெட்டிவேரின்பெயர்.
மூலகந்தம்-பூதகம்-வேரி-இருவேலி. ஆ ச.

இலாமிச்சையின்பெயர்.
வேர்-வாசம். ஆ உ

கடுகின்பெயர்.
கடிப்பகை-ஐயவி. ஆ உ.

கொத்துமலியின்பெயர்.
உருளரிசி. (௧)

கழங்கு-அல்லது கழற்காயின் [பெயர்.
மூழல். (௧)

கழங்கின்கொடியின்பெயர்.
கழல். (௧)

கிலுகிலுப்பையின்பெயர்.
பகன்றை. (௧)

சேம்பின்பெயர்.
சகுடம். (௧)

சூத்திரம்.

(௱௪௭) ———
சில்விசாகிநி சிறுகீரைப்பெ
யரே.

(௱௪௮) சூ.
*நந்தைகொத்தானாந்தையு
மாகும்.

(௱௪௯) சூ.
*பாயசம்பாற்சொற்றிபனசு
மூமாகும்.

(௱௫௰) சூ.
*குருவிந்தங்குஞ்சங்குன்றி
ப்பெயரே.

(௱௫௧) சூ.
*கோளிகொளிஞ்சி.

(௱௫௨) சூ.
*கரமஞ்சரிநாயுரீஇயென்ப.

(௱௫௩) சூ.
*இஞ்சிநறுமருப் பல்லமெ
ன்ப.

(௱௫௪) சூ.
குமரிகற்றாழையாகக்கூறுவர்.

(௱௫௫) சூ.
வங்கம்பிருகதிவழுதுணைவழு
தலை.

(௱௫௬) சூ.
ஐவனமலைச்சாரல்விளை நெ
ல்லாகும்.

(௱௫௭) சூ.
நீவாரங்குளநெல்.

(௱௫௮) சூ.
சாலிசெய்ந்நெல்லே.

(௱௫௯) சூ.
செந்நெல்விரீகி செஞ்சாலி
யாகும்.

பெயர்ப்பிரிவு.

சிறுகீரையின்பெயர்.
சில்லி-சாகிநி. ஆ ௨.

கொத்தான்பெயர்.
நந்தை-நாந்தை. ஆ ௨.

பாற்சொற்றியின்பெயர்.
பாயசம்-பனசம். ஆ ௨.

குன்றியின்பெயர்.
குருவிந்தம்-குஞ்சம். ஆ ௨.

கொளிஞ்சியின்பெயர்.
கோளி. (௧)

நாயுரீஇயின்பெயர்.
கரமஞ்சரி. (௧)

இஞ்சியின்பெயர்.
நறுமருப்பு-அல்லம். ஆ ௨.

கற்றாழையின்பெயர்.
குமரி. (௧)

வழுதலையின்பெயர்.
வங்கம்-பிருகதி-வழுதுணை. ஆ ௩.

மலைச்சாரல்விளைநெல்லின்
பெயர்.
ஐவனம். (௧)

குளநெல்லின்பெயர்.
நீவாரம். (௧)

செய்ந்நெல்லின்பெயர்.
சாலி. (௧)

செந்நெல்லின்பெயர்.
விரீகி-செஞ்சாலி. ஆ ௨.

சூத்திரம். | பெயர்ப்பிரிவு.

(௱கூ௰) —— | போரின்பெயர்.
* சும்மைகுவால்போர். | சும்மை-குவால். ஆ உ.
(௱கூக) சூ | அரிசியின்பெயர்.
அரியே தண்டு லமரிசியாகு [ம். | அரி-தண்டுலம். ஆ உ.
(௱கூஉ) சூ. | வேயரிசியின்பெயர்.
இயவைதோரையெனும்வே யரிசி. | இயவை-தோரை. ஆ உ.
(௱கூங) சூ. | சோளத்தின்பெயர்.
சொன்னலுமிறுங்குஞ் சோளமாகும். | சொன்னல்-இறுங்கு. ஆ உ.
(௱கூச) சூ. | கருந்தினையின்பெயர்.
இறடிகருந்தினை. | இறடி. (க)
(௱கூரு) சூ. | செந்தினையின்பெயர்.
எனல்செந்தினை. | எனல். (க)
(௱கூகூ) சூ. | உழுந்தின்பெயர்.
*மாடமுழுந்தே. | மாடம். (க)
(௱கூஎ) சூ. | துவரையின்பெயர்.
*ஆடகந்துவரை. | ஆடகம். (க)
(௱கூஅ) சூ. | காராமணியின்பெயர்.
* கூலமிதைகாராமணிக்கூற்றும். | கூலம்-இதை. ஆ உ.
(௱கூகூ) சூ. | கடலையின்பெயர்.
*மஞ்சூராங்கடலை. | மஞ்சூராம். (க)
(௱எ௰) சூ. | பயற்றின்பெயர்.
*முற்கம்பயறே. | முற்கம். (க)
(௱எக) சூ. | கம்பின்பெயர்.
*கவலைபுல்செந்தினை கம்பாகும்மே. | கவலை-புல்-செந்தினை. ஆ ங.
(௱எஉ) சூ. | கோதுமையின்பெயர்.
*கோதிகோதுமை. | கோதி. (க)
(௱எங) சூ. | கொள்ளின்பெயர்.
*குலுத்தங்காணங்கொள்ளாகும்மே. | குலுத்தம்-காணம். ஆ உ.

சூத்திரம்.

(௱எச) ——
*வரகுகோத்திரவம்.

(௱எ௫) சூ.
முதிரை யவரை துவரை முத லாயின.

(௱எ௬) சூ.
பரல்காழ்வீசம்வித்துவிதை யாம்.

(௱எஎ) சூ
எண்ணுந்திலமுமெள்ளென விசைப்பர்.

(௱எஅ) சூ.
கவ்வையெள்ளிளங்காயாகு ம்மே.

(௱எ௯) சூ.
சூல்கதிராகும்.

(௱அ௰) சூ.
பதடிபதரே.

(௱அக) சூ.
இருவியுமருவியுந்தினைத்தா ளாகும்.

(௱அஉ) சூ.
வையேபலாலம்வைக்கோலா கும்.

(௱அ௩) சூ.
வழுது மொரோவழிவையும் பெறுமே.

(௱அச) சூ.
பொங்கழிதூற்றுநெற்கூடா கும்.

(௱அ௫) சூ.
பயிரேபசும்புல் பைங்கூழா கும்.

பு

பெயர்ப்பிரிவு.

வரகின்பெயர்.
கோத்திரவம். (௧)

அவரைதுவரைமுதலாயினவற் றின்பெயர்.
முதிரை. (௧)

விதையின்பெயர்.
பரல்-காழ்-வீசம்-வித்து. ஆக ௪.

எள்ளின்பெயர்.
எண்-திலம். ஆக உ.

எள்ளிளங்காயின்பெயர்.
கவ்வை. (௧)

கதிரின்பெயர்.
சூல். (௧)

பதரின்பெயர்.
பதடி. (௧)

தினைத்தாளின்பெயர்.
இருவி-அருவி. ஆக உ.

வைக்கோலின்பெயர்.
வை-பலாலம். உ.

மற்றும்வைக்கோலின்பெயர்.
வழுது. (௧)
ஆக ௩.

தூற்றுநெற்கூட்டின் பெயர்.
பொங்கழி. (௧)

பயிரின்பெயர்.
பசும்புல்-பைங்கூழ். ஆக உ.

பு

சூத்திரம்.

(௩௮௬)
புதல்புல்லெனவருபுற்பிறப்பாகும்.

(௩௮௭) சூ.
*பதமுந் தூர்வையும் பச்சறுகாகும்.

(௩௮௮) சூ.
*சட்பமிளம்புல்.

(௩௮௯) சூ.
நாரிநெய்யரி தெங்கிளநீர்ப்பாளை.

(௩௯௰) சூ.
மூலங் கந்தங் கிழங்கென மொழிப.

(௩௯௧) சூ.
இலதையெனும்பெயர்கோற்கொடிக்கெய்தும்.

(௩௯௨) சூ.
கோற் கொடி மென் கொடி கொடியின்பிறப்பே.

(௩௯௩) சூ.
கற்பகஞ்சேர் கொடி காமவல்லி.

(௩௯௪) சூ.
வல்லியு நாழிலும் வள்ளியுங் கொடியே.

(௩௯௫) சூ.
மல்லிகைமௌவல்.

(௩௯௬) சூ.
மயிலையிருவாட்சி.

(௩௯௭) சூ.
மௌவலுந் தளவமுங் கற்பு முல்லை.

பி

பெயர்ப்பிரிவு.

புற்பிறப்பின்பெயர்.
புதல்-புல். ஆ. ௨.

பச்சறுகின்பெயர்.
பதம்-தூர்வை. ஆ. ௨.

இளம்புல்லின்பெயர்.
சட்பம். (௧)

தெங்கிளநீர்ப்பாளையின்பெயர்.
நாரி-நெய்யரி. ஆ. ௨.

கிழங்கின்பெயர்.
மூலம்-கந்தம். ஆ. ௨.

கோற்கொடியின்பெயர்.
இலதை. (௧)

கொடிப்பிறப்பின்பெயர்.
கோற்கொடி-மென்கொடி. ஆ. ௨.

கற்பகஞ்சேர்கொடியின் பெயர்.
காமவல்லி. (௧)

கொடியின்பெயர்.
வல்லி-நாழில்-வள்ளி. ஆ. ௩.

மல்லிகையின்பெயர்.
மௌவல். (௧)

இருவாட்சியின்பெயர்.
மயிலை. (௧)

முல்லையின்பெயர்.
மௌவல்-தளவம்-கற்பு. ஆ. ௩.

பி

சூத்திரம்.

(ாகூஅ)

பித்திகைசாதி கருமுகைமூன்று, மொத்தசிறு சண்பகமாகும்மே.

(ாகூகூ) சூ.

மாலதிமௌவலாகுமென்ப.

(உா) சூ.

மாலதிசிறுசண்பகமு மாகு[ம்.

(உாக) சூ.

*தமநகமருக்கொழுந்து.

(உாஉ) சூ.

துடிகூதாளங்கூதாளியென்[ப.

(உாரு) சூ.

விம்பமுந்தொண்டையுங்கொவ்வைப்பெயரே.

உாச) சூ.

*வள்ளைநாளிகம்.

(உாரு) சூ.

*கன்னிகிகிணிகருவிளைகாக்கணம்.

(உாகூ) சூ.

*மதூசங்கோத்தநிகைமுந்திரிகையாகும்.

(உாஎ) சூ.

*குளவிமலைப்பச்சை.

(உாஅ) சூ.

குண்டலிமுத்தாபலமிசங்கெனக்கூறுவர்.

(உாகூ) சூ.

*சடைதூர்சிவைவேர்.

பெயர்ப்பிரிவு.

சிறுசண்பகத்தின்பெயர்.

பித்திகை-சாதி- கருமுகை. ஆ ௩.

மௌவலின்பெயர்.

மாலதி. (க)

மாலதியென்னும்பெயர்.

சிறுசண்பகத்திற்குமுரித்து.

மருக்கொழுந்தின்பெயர்.

தமநகம். (க)

கூதாளியின்பெயர்.

துடி-கூதாளம். ஆ உ.

கொவ்வையின்பெயர்.

விம்பம்-தொண்டை. ஆ உ.

வள்ளையின்பெயர்.

நாளிகம். (க)

காக்கணத்தின்பெயர்.

கன்னி-கிகிணி-கருவிளை. ஆ ௩.

முந்திரிகையின்பெயர்.

மதூசம்-கோத்தநிகை. ஆ உ.

மலைப்பச்சையின்பெயர்.

குளவி. (க)

இசங்கின்பெயர்.

குண்டலி-முத்தாபலம். ஆ உ.

வேரின்பெயர்.

சடை-தூர்-சிவை. ஆ ௩.

சூத்திரம்.	பெயர்ப்பிரிவு.
(உ௱௰) ———	அடம்பின்பெயர்.
அடம்புசோபாலிகை.	சோபாலிகை. (க)
(உ௱௧௧) சூ.	விரிதூற்றின்பெயர்.
அதிரல்விரிதூறு.	அதிரல். (க)
(உ௱௧௨) சூ.	பிரக்கின்பெயர்.
பிரம்பிரக்கு.	பிரம். (க)
(உ௱௧௩) சூ.	பெரும்பிரக்கின்பெயர்.
*பெரும்பிரக்குப்படலிகை.	படலிகை. (க)
(உ௱௧௪) சூ.	பாகலின்பெயர்.
கூலம்பாகல்.	கூலம். (க)
(உ௱௧௫) சூ.	சிவேதையின்பெயர்.
சிவேதைபகன்றை.	பகன்றை. (க)
(உ௱௧௬) சூ.	சீந்திலின்பெயர்.
அமுதவல்லிசீந்தில்.	அமுதவல்லி. (க)
(உ௱௧௭) சூ.	காஞ்சொறியின்பெயர்.
கண்டூரங்காஞ்சொறி.	கண்டூரம். (க)
(உ௱௧௮) சூ.	தாளியின்பெயர்.
பஞ்சிகந்தாளி.	பஞ்சிகம். (க)
(உ௱௧௯) சூ.	நறையாலின்பெயர்.
பகன்றைநறையாலென்னவும்பகர்வர்.	பகன்றை. (க)
(உ௱௨௰) சூ.	வெற்றிலையின்பெயர்.
நாகவல்லிதாம்பூலம்வெற்றிலை.	நாகவல்லி - தாம்பூலம். ஆக உ.
(உ௱௨௧) சூ.	பிரண்டையின்பெயர்.
வச்சிரவல்லிபிரண்டையாகும்.	வச்சிரவல்லி. (க)
(உ௨௨) சூ.	அவுரியின்பெயர்.
நீலியவுரி.	நீலி. (க)
(உ௨௩) சூ.	குறிஞ்சியின்பெயர்.
குறிஞ்சிசகசரி.	சகசரி. (க)
(உ௨௪) சூ.	தும்பையின்பெயர்.
துரோணந்தும்பையாகச்சொல்லுவர்.	துரோணம். (க)

கு கு

சூத்திரம்.

(உஉ௫)

குசையே தருப்பையென்ன க்கூறுவர்.

(உஉ௬) சூ.

ஏருவை பஞ்சாய்க்கோரையென்ப.

(உஉ௭) சூ.

செருந்தி வாட்கோரை.

(உஉ௮) சூ.

காசை நாணல்.

(உஉ௯) சூ.

*விணம் விழற்புல்.

(உ௩௰) சூ.

புற்கொடி மென்பூச் சுரை யெனப்புகல்வர்.

(உ௩௧) சூ.

நீர்முள்ளி முண்டகமாகுமென்ப.

(உ௩௨) சூ.

நாரஞ்செவிரம் பதிகஞ்சைவலம், பாசியென்றுபகரப்படுமே.

(உ௩௩) சூ.

கல்கார நீர்க்குளிரியென்ப.

(உ௩௪) சூ.

புண்டரீகம் பதும நளிநஞ் சரோருக, முண்டகமம்போருகமரவிந்தம், பங்கயமம்புயம் வாரிசஞ்சலசங், கஞ்சம்வநசங் கோகநதங்கமல, முளரிநீரோருகந்திருமால்கொப்பூழ், திருமலரிண்டை சதபத்திரியென, வருபவைதாமரைவண்பெயராகும்.

பெயர்ப்பிரிவு.

தருப்பையின்பெயர்.

குசை. (க)

பஞ்சாய்க்கோரையின்பெயர்.

ஏருவை. (க)

வாட்கோரையின்பெயர்.

செருந்தி. (க)

நாணலின்பெயர்.

காசை. (க)

விழற்புல்லின்பெயர்.

விணம். (க)

சுரையின்பெயர்.

புற்கொடி. (க)

நீர்முள்ளியின்பெயர்.

முண்டகம். (க)

பாசியின்பெயர்.

நாரம் - செவிரம் - பதிகம் - சைவலம். ஆக ௪.

நீர்க்குளிரியின்பெயர்.

கல்காரம். (க)

தாமரையின்பெயர்.

புண்டரீகம் - பதுமம் - நளிநம் - சரோருகம் - முண்டகம் - அம்போருகம் - அரவிந்தம் - பங்கயம் - அம்புயம் - வாரிசம் - சலசம் - கஞ்சம் - வநசம் - கோகநதம் - கமலம் - முளரி - நீரோருகம் - திருமால்கொப்பூழ் - திருமலர் - இண்டை - சதபத்திரி. ஆக உக.

சூத்திரம்.

(௨௫௫) ——
*வராடகந்தாமரைக் காயெ
னவகுப்பர்.

(௨௫௬) சூ.
*சுருள்விசிவளயம்.

(௨௫௭) சூ.
உற்பலங்குவலயங் கழுநீர்கு
வளை.

(௨௫௮) சூ.
நீலோற்பலமிந்தீவரங்குவல
ய,நீலம்பானல் காவிகருங்குவ
ளை, கல்லாரமுமெனக்கழறலா

(௨௫௯) சூ. [கும்
செங்குவளையரத்த முற்பல
ஞ் செங்கழுநீர்.

(௨௬௦) சூ.
குவலயநெய்தலாகவுங்கூறு

(௨௬௧) சூ. [வர்.
கைரவஞ்செவ்வல்லிசெவ்வா
ம்பலாகும்.

(௨௬௨) சூ.
வெள்ளாம்பல்சேதாம்பலெ
ன்றிருவிகற்பமுங், கொள்பவ
ன்றே குமுதப்பெயர்க்கொ

(௨௬௩) சூ. [டை.
ஆம்பலுநெய்தலுமல்லியுங்
குமுதம்.

(௨௬௪) சூ.
அல்லியகவிதழ்.

(௨௬௫) சூ.
புல்லிபுறவிதழ்.] பொ

பெயர்ப்பிரிவு.

தாமரைக்காயின்பெயர்.
வராடகம். (௧)

தாமரைச்சுருளின்பெயர்.
விசி-வளயம். ஆ ௨.

குவளைப்பொதுப்பெயர்.
உற்பலம்-குவலயம்-கழுநீர்.
ஆ ௩.

+கருங்குவளையின்பெயர்.
நீலோற்பலம் - இந்தீவரம்-
குவலயம் - நீலம் - பானல்-கா
வி-கல்லாரம். ஆ ௭.

செங்குவளையின்பெயர்.
அரத்தம்-உற்பலம்-செங்க
ழுநீர். ஆ ௩.

குவலயமெனும்பெயர்.
நெய்தற்குமுரித்து.

செவ்வாம்பலின்பெயர்.
கைரவம்-செவ்வல்லி. ஆ ௨.

குமுதமென்னும்பெயர்.
வெள்ளாம்பற்குஞ் செவ்வா
ம்பற்குமுரித்து.

+குமுதத்தின்பெயர்.
ஆம்பல்-நெய்தல்-அல்லி-
ஆ ௩.

அகவிதழின்பெயர்.
அல்லி. (௧)

புறவிதழின்பெயர்.
புல்லி. (௧)] பொ

+ பிங்கலந்தைமுதலியவற்றில் கருங்குவளையைக் கருநெய்த
லெனவும், குமுதத்தைவெண்ணெய்தலெனவுங்கூறுவர்.

சூத்திரம்.

(உசக)

பொகுட்டேகன்னிகைபூவி
னுட்கொட்டை.

(உசஎ) சூ.

கோட்டுப்பூக்கொடிப்பூநீர்
ப்பூநிலப்பூத், தோற்றமுடை
யபூவின்றொடர்பே.

(உசஅ) சூ.

முகை நனைகலிகை முகிழ் சி
னை கோரக, + நகைகன்னிகை
போகிலரும்புமொட்டே.

(உசகூ) சூ.

அலர்தாரலரிபோது வீ துண
ர், மலரோடிணரிவை மலர்ந்த
பூவே.

(உருய) சூ.

துணரோமஞ்சரிவல்லரிதொ
த்தோ, டிணரோகுலையிவைபூங்
கொத்தென்ப.

(உருக) சூ.

நல்லிசையம்பற் செல்வச்
சேந்தனில், வரைவில்கல்வியிற்
படையிற்கொடையில்,வெல்லு
நரணிவாகைவெற்றிப்பூவே.

(உருஉ) சூ.

செம்மல்பழைம்பூ வாகச்
செப்புவர்.

(உருங) சூ.

மகரந்தங் கேசரங் கொங்கு
மலர்த்தாதே.

(உருச) சூ.

எடுந்தோடும்பூவினிதழே.

தொ

பெயர்ப்பிரிவு.

பூவினுட்கொட்டையின்
பெயர்.

பொகுட்டு-கன்னிகை.

ஆ உ.

பூவின்வகையாவன

கோட்டுப்பூ-கொடிப்பூ-நீர்
ப்பூ-நிலப்பூ. ஆ ச.

மொட்டின்பெயர்.

முகை-நனை-கலிகை-முகிழ்-
சினை-கோரகம்-நகை-கன்னி
கை-போகில்-அரும்பு. ஆ கூ.

பூவின்பெயர்.

அலர்-தார்-அலரி-போது-
வீ-துணர்-மலர்-இணர்.

ஆ அ.

பூங்கொத்தின்பெயர்.

துணர் - மஞ்சரி - வல்லரி -
தொத்து-இணர்-குலை. ஆ சு.

வரம்பில்லாத கல்வியிலும்
படையிலுங் கொடையிலும்பி
றரை வெல்லுநரணியும் வெற்
றிப்பூவின்பெயர்.

வாகை. (க)

பழைம்பூவின்பெயர்.

செம்மல். (க)

மலர்த்தாதின்பெயர்.

மகரந்தம்-கேசரம் - கொ
ங்கு. ஆ ங.

பூவிதழின்பெயர்.

எடு-தோடு. ஆ உ.

தொ

+ நகையென்பது-அடைமொழியென்க்கொளினுமமையும்.

சூத்திரம்.

(உருரு)

தொடையல்வாசிகை சிகழிகைகோதை,படலையலங்கல்கத்திகைபிணைய,லணியல்சுருக்கைதொடலைதாமந், தொங்கறெரியல்கண்ணிதார்சூட்டு, மஞ்சரியொலியலிலம்பகமாலை.

(உருசு) சூ.

* பிணையல்பின்னியமாலைப்பெயரே.

(உருஎ) சூ.

சூட்டு [illegible]னிலம் பகநுதலணிமாலை.

(உருஅ) சூ.

மாலைசிகழிகைவாசிகைதொடைய, லாகுமென்பவறிந்திசினோரே.

பெயர்ப்பிரிவு.

மாலையின்பெயர்.

தொடையல்-வாசிகை- சிகழிகை-கோதை-படலை- அலங்கல்-கத்திகை-பிணையல்-அணியல்-சுருக்கை-தொடலை- தாமம்-தொங்கல் - தெரியல்-கண்ணி-தார்-சூட்டு-மஞ்சரி- ஒலியல்- இலம்பகம். ஆ உய.

பின்னியமாலையின்பெயர்.

பிணையல். (க)

நுதலணிமாலையின்பெயர்.

சூட்டு-இலம்பகம். ஆ உ.

வாசிகையின்பெயர்.

மாலை-சிகழிகை - தொடையல். ஆ ங.

நாடேபிறர் நாட்டிற்குவமையாறே, காலமறிந்துதவுங் காவிரிதானே,யாடவர்திலகனம்பன்மன்ன,னீடிசைத்தலைவனருவந்தைச்சேந்த, ஞயந்ததிவாகரத் தரும்பொருள் விளக்கு, நான்காவதுமரப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஐந்தாவது

இடப்பெயர்த்தொகுதி.

சூத்திரம்.

(௧)

*அமுதங்கேவலமபவருக்கம் வீடு, சிவங்கைவல்லியஞ் சித்தி மீளாக்கதி,பரகதியோடுமுத்தி பஞ்சமகதி, நிர்வாண மோக்க மெனநிகழ்த்தினரே.

(௨) சூ

தாநந்துறக்கம் பொன்னுல கும்பர்,வானகமமருலகுயர் நிலைபுத்தேள்,வியனுலகுவிசும்பு விண்ணுலகுநாகம், பவநமாசு வர்க்கந்தெய்வலோகப்பெய ரே.

(௩) சூ.

*பவநநாகலோகப்பாலதா ம்.

(௪) சூ.

சேணியுஞ்சேடியும்விஞ்சை யர்சேரிடம்.

(௫) சூ.

மாதிரமாசைவம்பறிசைப் பெயர்.

(௬) சூ.

கருபமிசைபுலந்தேந்திக்கரித ம், விசும்புமுலகுங் கோக்காட் டையுமாம்.

(௭) சூ.

குணக்கேபூருவமிந்திரிபிரா சி,கிழக்குக்கீழ்த்திசை கிளக்கு ங்காலே.

அ

பெயர்ப்பிரிவு.

மோக்கத்தின்பெயர்.

அமுதம்-கேவலம்-அபவருக்கம்-வீடு-சிவம்-கைவல்லியம்-சித்தி-மீளாக்கதி-பரகதி-முத்தி-பஞ்சமகதி-நிர்வாணம். ஆ ௧௨.

தெய்வலோகத்தின்பெயர்.

தாநம்-துறக்கம்-பொன்னுலகு-உம்பர்-வானகம்-அமருலகு-உயர்நிலை-புத்தேளுலகு-விசும்பு-விண்ணுலகு-நாகம்-பவநம்-சுவர்க்கம். ஆ ௧௩.

நாகலோகத்தின்பெயர்.

பவநம். (௧)

விஞ்சையருலகத்தின்பெயர்.

சேணி-சேடி. ஆ ௨.

திசையின்பெயர்.

மாதிரம்-ஆசை-வம்பல். [௩.

மற்றுந்திசையின்பெயர்.

கருபம்-மிசை-புலம்-தேம்-திக்கு-அரிதம்-விசும்பு-உலகு-கோ-காட்டை. ௰

ஆ ௰௩.

கீழ்த்திசையின்பெயர்.

குணக்கு-பூருவம்-இந்திரி-பிராசி-கிழக்கு. ஆ ௫.

அ

சூத்திரம்.

(அ)

அவாசிதக்கணம்யாமியந்தெ
க்குச், சிவேதைமற்றிவைதெற்
கெனலாகும்.

(கூ) சூ.

மேக்குப் பச்சி மங்குடக் இ
வைமேற்கே,

(ய) சூ.

வாருணம் பிரத்தியக்கு மது
வே.

(கக) சூ.

உதக்கேயுதீசியுத்தர மென்
ன,வடக்கின்பெயரிவைவைக்கு
ங்காலே.

(கஉ) சூ.

அவநிகாசிநி மேதிநி யளக்க
ர், தரணிதாரணி தராதலங்குவ
லயம், புடவி பூதலந் தரைபடி
ஞாலம், வையமகிலங் குமண்பு
விபார் + நா,டுலகுபுவநி யாரியு
கநேமி, யகலிடம் பொறையர
ண் மண்டிலம் பூத்திணை, தலம்
பொழில் பிருதிவிவேலாவலய,
நிலஞ்சகந்தாலம் பூமியென நிக
ழ்த்தினர்.

(கங) சூ.

நிரயந் துருக்கம்பாதாளங்கும்
பி,யள்ளலளறேயருஞ் சிறையி
ருணில,மெரியுந்திமிரமுமிரௌ
ரவமென்றிவை, நரகின் பெய
ரெனநவிலப்படுமே.

பு

பெயர்ப்பிரிவு.

தெற்கின்பெயர்.

அவாசி - தக்கணம் - யாமிய
ம் - தெக்கு - சிவேதை. ஆ ௫.

மேற்கின்பெயர்.

மேக்கு - பச்சிமம் - குடக்கு. ௩.

மற்றுமேற்கின்பெயர்,

வாருணம் - பிரத்தியக்கு. ௨.

ஆ ௫.

வடக்கின்பெயர்.

உதக்கு - உதீசி - உத்தரம்.

ஆ ௩.

பூமியின்பெயர்.

அவநி - காசிநி - மேதிநி - அளக்
கர் - தரணி - தாரணி - தராதலம் -
குவலயம் - புடவி - பூதலம் - த
ரை - படி - ஞாலம் - வையம் - அகி
லம் - கு - மண் - புவி - பார் - நாடு -
உலகு - புவநி - பாரி - யுகம் - நே
மி - அகலிடம் - பொறை - அர
ண் - மண்டிலம் - பூ - திணை - தல
ம் - பொழில் - பிருதிவி - வேலா
வலயம் - நிலம் - சகம் - தாலம்.

ஆ ௩அ.

நரகத்தின்பெயர்.

நிரயம் - துருக்கம் - பாதாள
ம் - கும்பி - அள்ளல் - அளறு - அ
ருஞ்சிறை - இருணிலம் - எரி - தி
மிரம் - இரௌரவம். ஆ யக.

பு

+ நாடுநடுவெனவும்பாடம்.

(கரு) சூ.
புவநநாடு பொழிறலம் புட
வி,பவநமுலகின் பொதுப்பெ
யர்ப்பால.

உலகின்பொதுப்பெயர்.
புவநம்-நாடு-பொழில்-தல
ம்-புடவி-பவநம். ஆ௲ சு.

(கசு) சூ.
பைதிர மண்டிலம் பாண்டி
றேயந், தண்ணடைசநபத மக
லுள் சும்மை, கண்டமேணியுல
கென்றிவைநாடே.

நாட்டின்பெயர்.
பைதிரம்-மண்டிலம்-பாண்
டில்-தேயம்- தண்ணடை - சந
பதம்- அகலுள்-சும்மை-கண்ட
ம்-எணி-உலகு. ஆ௲ யக.

(கஎ) சூ.
விலங்கலடுக்கல்வெற்புப்ப
ருப்பதஞ்,சிலம்பு நாகங்குறும்
பொறை சிகரம், வேதண்டம்
வேரங்கிரிதிகிரிசையம், தரணி
பூதரமோங்கல்பிறங்கல்,குவடு
குன்றோதிபறம்புவரைவிண்டு,
போதி கோச்சிலையிறும்பு தட
மாதிரம்,பொச்சை நவிர்கல்லக
ம்பொருப்புநகமசலஞ்,சாரல்
சிலோச்சயஞ் சைலமலையென்
[ப.

மலையின்பெயர்.
விலங்கல்- அடுக்கல் - வெற்
பு-பருப்பதம்- சிலம்பு - நாக
ம்-குறும்பொறை-சிகரம்-வே
தண்டம்-வேரம்-கிரி-திகிரி-சை
யம்-தரணி-பூதரம்-ஓங்கல்-பி
றங்கல்-குவடு-குன்று-ஓதி-பற
ம்பு- வரை - விண்டு - போதி-
கோ- சிலை- இறும்பு-தடம்-மா
திரம்-பொச்சை-நவிர்- கல்லக
ம்-பொருப்பு-நகம்- அசலம்-
சாரல்-சிலோச்சயம்-சைலம்.
ஆ௲ நூஅ.

(கஅ) சூ.
பொன்மலைமேரு.

மேருவின்பெயர்.
பொன்மலை. (க)

(கஅ) சூ.
*வெண்மலைவேதண்டம்விச
யார்த்தம்வெள்ளிமலை.

வெள்ளிமலையின்பெயர்.
வெண்மலை-வேதண்டம்-வி
சயார்த்தம். ஆ௲ ந.

(ககூ) சூ.
பொதியமலைமலயம்.

பொதியமலையின்பெயர்.
மலயம். (க)

(உ0) சூ.
வல்லியம்பொருப்பே கொ
ல்லிமலையாகும். இ

கொல்லிமலையின்பெயர்.
வல்லியம்பொருப்பு. (க)
இ

(உக) சூ.

இறும்பு பொச்சை குவடுப
தலை, பிறங்கல்பொற்றைகுறும்
பொறைகுன்றே.

(உஉ) சூ.

கோடுகொடுமுடிகுவடுசிகர
ஞ், சிமையமைந்து மலையினுச்
[சி.

(உ௩) சூ.

வாரமுந்தடமுஞ் சாரலு ம
லைப்பக்கம்.

(உ௪) சூ.

அறையேபாறை.

(உ௫) சூ.

பொறையே துறுகல்.

(உ௬) சூ.

முடுக்கர் கந்தர மலைமுழை
யென்ப.

(உ௭) சூ.

பிலமேகீழறை.

(உ௮) சூ.

* நிகுஞ்சங்குகையாம்.

(உ௯) சூ.

கண்டறைகற்புழை.

(௩௰) சூ.

* கற்பாழிகாண்டையுங் கரு
துவரதற்கே.

(௩க) சூ.

சிலையேகல்லே.

(௩உ) சூ.

உலமேதிரள்கல்.

(௩௩) சூ.

நூழையுஞ்சுருங்கையு நுழை
வாயிலாகும்.

வி

குன்றின்பெயர்.

இறும்பு-பொச்சை-குவடு-
பதலை-பிறங்கல் - பொற்றை-
குறும்பொறை. ஆ ௭.

மலையுச்சியின்பெயர்.

கோடு-கொடுமுடி - குவடு-
சிகரம்-சிமையம். ஆ ௫.

மலைப்பக்கத்தின்பெயர்.

வாரம்-தடம்-சாரல். ஆ ௩.

பாறையின்பெயர்.

அறை. (க)

துறுகல்லின்பெயர்.

பொறை. (க)

மலைமுழையின்பெயர்.

முடுக்கர்-கந்தரம். ஆ உ.

கீழறையின்பெயர்.

பிலம். (க)

குகையின்பெயர்.

நிகுஞ்சம். (க)

கற்புழையின்பெயர்.

கண்டறை. (க)

மற்றுங்கற்புழையின்பெயர்.

கற்பாழி-காண்டை. உ.

ஆ ௩.

கல்லின்பெயர்.

சிலை. (க)

திரள்கல்லின்பெயர்.

உலம். (க)

நுழைவாயிலின்பெயர்.

நூழை-சுருங்கை. ஆ உ.

வி

(௩௪) சூ.
விடர்மலைப் பிளப்பென வி
ளம்பினர்புலவர்.

மலைப்பிளப்பின்பெயர்.
விடர். (௧)

(௩௫) சூ.
விடருங்கமரும்வெடிப்பின்
பெயரே.

வெடிப்பின்பெயர்.
விடர்-கமர். ஆக ௨.

(௩௬) சூ.
திட்டைதிடரே.

திடரின்பெயர்.
திட்டை. (௧)

(௩௭) சூ.
பதுக்கைசிறுதிட்டை.

சிறுதிட்டையின்பெயர்.
பதுக்கை. (௧)

(௩௮) சூ.
பரலடுத்துயர்நில முரம்பெ
னப்படுமே.

பரலடுத்துயர்நிலத்தின்பெயர்
முரம்பு. (௧)

(௩௯) சூ.
திட்டைதிடறுசுவல் வல்லை வ
ன்பான்,மெட்டுத்திடர்படர்கு
ப்பைகுவால்குவை,யொட்டிய
பதினொன்று மேடென வுரை
ப்பர்.

மேட்டின்பெயர்.
திட்டை-திடறு-சுவல்-வல்லை-வன்பால்-மெட்டு-திடர்-படர்-குப்பை-குவால்-குவை. ஆக ௰௧.

(௪௰) சூ.
ஆம்பிலம்பாதலம்பாதாள
ப்பெயரே.

பாதாளத்தின்பெயர்.
ஆம்பிலம்-பாதலம். ஆக ௨.

(௪௧) சூ.
அத்திபௌவமளக்கரார்க
லி,யாழிபெருநீரம்பரமுந்நீர்,உ
ப்புவீரைசக்கரஞ் சாகரம், வே
லைவெள்ள மகராலயநேமி, சல
நிதிவாரிசலதியலையே,பாராவா
ரமுததிசமுத்திரம், பரவையுவ
ரிநரலைபுணரிவாரிதி, வேலாவல
யங்கார்கோ ளோதம்,வாருண
ஞ்சிந்து வாரமம்புராசி,கார்ம
..வி

கடலின்பெயர்.
அத்தி-பௌவம்-அளக்கர்-ஆர்கலி-ஆழி-பெருநீர்-அம்பரம்-முந்நீர்-உப்பு-வீரை-சக்கரம்-சாகரம்-வேலை-வெள்ளம்-மகராலயம்-நேமி-சலநிதி-வாரி-சலதி-அலை-பாராவாரம்-உததி-சமுத்திரம்-பரவை-உவர்-நரலை-புணரி-வாரிதி-வேலாவலயம்-கார்கோள்-ஓதம்-வா

லியுவரிகடலெனக்கருதுவர்.

(௬௨) சூ.
ஓதமும்புணரியுங்கடற்றிரை யாகும்.

(௬௩) சூ.
சீகரந்தரங்கமறல்கல்லோல, மலைபுனற்றிரைக்கு வரும்பொ துப்பெயரே.

(௬௪) சூ.
வேலையும்பாராவாரமுங்கட ற்கரை.

(௬௫) சூ.
தீரம்பாரம் வரையணைகோ டு, கூலம் வாரம் புனற் கரைப் பொதுப்பெயர்.

(௬௬) சூ.
குலையுஞ் சேதுவுங்குரம்பு ஞ்செய்கரை.

(௬௭) சூ.
அருவிமலைச்சாரல்வரும்யா றாகும்.

(௬௮) சூ.
கலுழியுமுயவையுமுல்லைக் கான்யாறு.

(௬௯) சூ.
உந்திநதி துறை வருபுனல்கு டிஞை,சிந்துவேரொலியலா றெனச்செப்புவர்.

(௭௰) சூ.
கானன்மூரம்புகாயன்முகங் கழி.

அ

வாருணம்-சிந்து-வாரம்- அம் புராசி-உவரி. ஆ ௯௬.

கடற்றிரையின்பெயர்.
ஓதம்-புணரி. ஆ உ.

புனற்றிரைப் பொதுப்பெயர்.
சீகரம்-தரங்கம்-அறல்- கல் லோலம்-அலை. ஆ ரு.

கடற்கரையின்பெயர்.
வேலை-பாராவாரம். ஆ உ.

புனற்கரைப் பொதுப்பெயர்.
தீரம்-பாரம்-வரை- அணை- கோடு-கூலம்-வாரம். ஆ எ.

செய்கரையின்பெயர்,
குலை-சேது-குரம்பு. ஆ ௩.

மலைச்சாரல்வரும்யாற்றின் பெயர்.
அருவி. (க)

முல்லைக்கான்யாற்றின் பெயர்.
கலுழி-உயவை. ஆ உ.

ஆற்றின்பொதுப்பெயர்.
உந்தி-நதி-துறை-வருபுன ல்-குடிஞை-சிந்து - ஒலியல். ஆ எ.

கழியின்பெயர்.
கானல்-மூரம்பு-காயல்-முகம் ஆ ச.

அ

சூத்திரம்.

(௯௧)

அத்தோமுகம் புகாரோடழி
வில்கூடல், கழிமுகமென்று க
ருதல்வேண்டும்.

(௯௨) சூ.

உப்பளங்காய லுவளகமளக்
[கர்.

(௯௩) சூ.

பொன்னிகாவிரி.

(௯௪) சூ.

பொருநைதண்பொருந்தம்

(௯௫) சூ.

குமரிகந்நியாகக்கூறுவர்.

(௯௬) சூ.

வேகவதிவேவையையாகும்.

(௯௭) சூ.

ஆனிவானியான்பொருந்த
[மாகும்.

(௯௮) சூ.

* கோதைகெளதமையாகக்
கொள்வர்.

(௯௯) சூ.

* விருத்தகங்கைவிமலைகோ
[தாவிரி.

(௧௦௦) சூ.

*பாவிகோநதிபால்யாறுகும்

(௧௦௧) சூ.

அலந்தைதபண்ணைகோட்ட
கங்கிடங்கோ, டிலஞ்சிதாங்கல்
சுனையேல்வையோடை, வட்ட
ந்தடாக மடுக்குளம்வலயங், கு
ட்டங்குண்டம்பட்டஞ்சூழி,
பொய்கைகேணியாவிதடம்ப
டுகரேரிகயம்பயமுவளகம்வா
வி,

இ

பெயர்ப்பிரிவு.

கழிமுகத்தின்பெயர்.

அத்தோமுகம்-புகார்-கூடல் ஆ ௩.

உப்பளத்தின்பெயர்.

காயல்-உவளகம்-அளக்கர். ஆ ௩.

காவிரியின்பெயர்.

பொன்னி. (௧)

பொருநையின்பெயர்.

தண்பொருந்தம். (௧)

கந்நியின்பெயர்.

குமரி. (௧)

வையையின்பெயர்.

வேகவதி. (௧)

ஆன்பொருந்தநதியின்பெயர்.

ஆனி-வானி. ஆ ௨.

கெளதமைநதியின்பெயர்

கோதை. (௧)

கோதாவிரியின்பெயர்.

விருத்தகங்கை-விமலை. ஆ ௨.

பால்யாற்றின்பெயர்.

பாவி-கோநதி. ஆ ௨.

வாவியின்பெயர்.

அலந்தை- பண்ணை - கோட்டகம்-கிடங்கு- இலஞ்சி- தாங்கல்-சுனை-ஏல்வை-ஓடை-வட்டம்-தடாகம்-மடு-குளம்-வலயம்-குட்டம்-குண்டம்-பட்டம்-சூழி - பொய்கை - கேணி - ஆவி-தடம்-படுகர்-ஏரி-கயம்-பயம்-உவளகம். ஆ ௨௭.

இ

சூத்திரம்.	பெயர்ப்பிரிவு.
(௬உ) ——— இலவந்திகையேயெந்திரவா[வி.	ஏந்திரவாவியின்பெயர். இலவந்திகை. (க)
(௬௩) சூ. இலங்கையுந் துருத்தியு மெனவரும்பெயரோ, டரங்கமு மாற்றிடைக்குறையெனவறைவ[ர்.	யாற்றிடைக்குறையின் பெயர். இலங்கை - துருத்தி - அரங்கம். ஆ - ௩.
(௬௪) சூ. உளருணும்பொதுநீரூருணியாகும்.	உளருணுநீர்ப்பெயர். உளருணி. (க)
(௬௫) சூ. கூவலுமகம்புங் கூபமுங் குழியும், பூவலுங்கேணியுந் தாவுங்கிணறே.	கிணற்றின்பெயர். கூவல் - அகம்பு - கூபம் - குழி - பூவல் - கேணி - தாவு. ஆ - எ.
(௬௬) சூ. அஃகுமுறவியு மகம்புமூற[ல்.	ஊறலின்பெயர். அஃகு - உறவி - அகம்பு - ஆ - ௩.
(௬எ) சூ. புற்புதமொக்குள்பௌவநீர்க்குமிழி.	நீர்க்குமிழியின்பெயர். புற்புதம் - மொக்குள் - பௌவம். ஆ - ௩.
(௬அ) சூ. நுரையேபேநமாகுமென்[ப.	நுரையின்பெயர். பேநம். (க)
(௬௯) சூ. அழுந்துங்குண்டுங்கயமுமா[ழம்.	ஆழத்தின்பெயர். அழுந்து - குண்டு - கயம் - ஆ - ௩.
(எ0) சூ. வழாறும்பிராறும் வாரியுநிறைபுனல்.	நிறைபுனலின்பெயர். வழாறு - பிராறு - வாரி. ஆ - ௩.
(எக) சூ. அகாதமென்பது நீந்துபுனலாகும். கொ	நீந்துபுனலின்பெயர். அகாதம். (க) கொ

சூத்திரம்.	பெயர்ப்பிரிவு.
(௭௨) —— கோலமென்பது கொழுந்துநீரோட்டம்.	கொழுந்துநீரோட்டத்தின் பெயர். கோலம். (௧)
(௭௩) சூ. சர்சலமென்பதுதெளிநீராகும்.	தெளிநீரின்பெயர். சற்சலம். (௧)
(௭௪) சூ. விலங்கல்கலுழிகலங்கற்புனலே.	கலங்கற்புனலின்பெயர். விலங்கல்-கலுழி. ஆ௨.
(௭௫) சூ. அள்ளலசறேடளக்கரஞறு, கொள்ளமளறுகுழம்புகாலாழ், தொள்ளிபங்கம்பூழிகுழைசேறே.	சேற்றின்பெயர். அள்ளல்-அசறு-அளக்கர்-அஞறு-கொள்ளம்-அளறு-குழம்பு-காலாழ்-தொள்ளி-பங்கம்-பூழி-குழை. ஆ௰௨.
(௭௬) சூ தொய்யிறொளியேசெதும்புசேதகஞ்,செய்யலென்றிவைசேறெனத்தகுமே.	மற்றுஞ்சேற்றின்பெயர். தொய்யில்-தொளி-செதும்பு-சேதகம்-செய்யல் ௫. ஆ௰௭.
(௭௭) சூ அருப்பமசடமழுவம் வழுக்குநிலம்.	வழுக்குநிலத்தின்பெயர். அருப்பம்-அசடம்-அழுவம். ஆ௩.
(௭௮) சூ. அகம்புமயகுமகுபாகந்தன்னுட, னங்கணமுஞ் சகதியும்பொல்லாநிலமே.	பொல்லாநிலத்தின்பெயர். அகம்பு-அயகு-அகுபாகம்-அங்கணம்-சகதி. ஆ௫.
(௭௯) சூ. வாலுகம்வெண்மணல்.	வெண்மணலின்பெயர். வாலுகம். (௧)
(௮௰) சூ. புளிநமணற்குன்றே.	மணற்குன்றின்பெயர். புளிநம். (௧)
(௮௧) சூ அதரயிர் நுண்மணல்.	நுண்மணலின்பெயர். அதர்-அயிர். ஆ௨.
(௮௨) சூ. பொடிபூழ்திபுழுதியாகுமென்ப. அ	புழுதியின்பெயர். பொடி-பூழ்தி- ஆ௨. அ

சூத்திரம்.

(௮௩) ——
அறலேயலைநுண்கருமணலா
[கும்

(௮௪) சூ.
மலைச்சார்புகுறிஞ்சிநிலம்.

(௮௫) சூ.
கடற்சார்புநெய்தனிலம்.

(௮௬) சூ.
காடுசார்நிலமுல்லை.

(௮௭) சூ.
நாடுசார்நிலமருதம்

(௮௮) சூ.
நீரின்றிவேனிற்றெறுநிலம்
பாலை.

(௮௯) சூ.
அகணிபணைபண்ணைபழனங்
கழனி,பானல்கம்பலைபடுகர்வ
யன்மருதம்.

(௯௰) சூ.
புறவம்புறம்பணைமுல்லைநில
ப்பெயர்.

(௯௧) சூ.
அறைவர்குறிஞ்சிக்குமப்
பெயர்தானே.

(௯௨) சூ.
வன்பால்குறிஞ்சியும்பாலையு
மாகும்.

(௯௩) சூ.
மென்பா லென்பது மருத
மேற்றே.

(௯௪) சூ.
முல்லையுநெய்தலுமொழிச
மப்பாலே.

பெயர்ப்பிரிவு.

அலைகொழித்தகருநுண்மணலி
ன்பெயர்.
அறல். ஆ. ௧.

குறிஞ்சியென்பது.
மலைச்சார்புநிலம். (௧)

நெய்தலென்பது.
கடற்சார்புநிலம். (௧)

முல்லையென்பது.
காடுசார்நிலம். (௧)

மருதமென்பது.
நாடுசார்நிலம். (௧)

பாலையென்பது.
நீரினறிவெப்புறுநிலம். (௧)

மருதநிலத்தின்பெயர்.
அகணி - பணை - பண்ணை - பழ
னம் - கழனி - பானல் - கம்பலை -
படுகர் - வயல். ஆ. ௯.

முல்லைநிலத்தின்பெயர்.
புறவம் - புறம்பணை. ஆ. ௨.

குறிஞ்சிநிலத்தின்பெயர்
புறவம் - புறம்பணை. ஆ. ௨.

வன்பாலெனும்பெயர்.
குறிஞ்சிக்கும் - பாலைக்குமா
ம்.

மென்பாலெனும்பெயர்.
மருதத்திற்காம்.

சமப்பாலெனும்பெயர்.
முல்லைக்கும் - நெய்தற்குமா
[ம்.

சூத்திரம்.

(௧௫)
மலையினீரில்வரத்தில்வந்தமற், றிணையமிருதிச்சொற்கருநிலப்பெயரே.

(௧௬) ௸.
அரூவந்தருக்கமாகுமென்ப.

(௧௭) ௸.
பாக்கம்பட்டினம்பதிநகர்சும்மை, பூக்கஞ்சேரிபுரமுட்டம்பூண்டி, யகரங்குடியே குறிச்சிகோசர, மகலுளொச்சியிருக்கைவேலி, குப்பம்பாடிகுறும்புபாழி, சிறுகுடிதண்ணடையுறையுளெயிலொடு, வாழ்க்கையுட்படுத் திருபத்தேழு, நாடிலானெனநவின்றிசினோரே.

(௧௮) ௸.
சரந்தநீரும்வயலுஞ்சூழ்ந்தவூர், கிராமமாகக்கிளக்கப்படுமே.

(௧௯) ௸.
குடியைஞ்ஞூறுகுறைவறநிறைந்தது, பெருங்கிராமமெனப்பேசப்படுமே.

(௨௰) ௸.
கிரிபலசூழவடுத்தவூர் கேடகம்.

(௨௧) ௸.
மலையுமாறுமடுத்த வூர்கர்வடம்.

பெயர்ப்பிரிவு.

கருநிலமென்பது.
மலையினும் நீரினும் வரத்தினு மிருதிநிலம்.

தருக்கத்தின்பெயர்.
அரூவம். (௧)

ஊரின்பெயர்.
பாக்கம்-பட்டினம்-பதி-நகர்-சும்மை-பூக்கம்-சேரி-புரம்-முட்டம்-பூண்டி-அகரம்-குடி-குறிச்சி-கோசரம்-அகலுள்-ஒச்சி-இருக்கை-வேலி-குப்பம்.பாடி-குறும்பு-பாழி-சிறுகுடி.தண்ணடை.உறையுள்-எயில்-வாழ்க்கை.ஆக ௨௭

நீரும்வயலுஞ்சூழ்ந்தவூரின்பெயர்.
கிராமம். (௧)

ஐஞ்ஞூறுகுடிநிறைந்தவூரின்பெயர்.
பெருங்கிராமம். (௧)

மலைசூழ்ந்தவூரின்பெயர்
கேடகம். (௧)

மலையுமாறுஞ்சூழ்ந்தவூரின்பெயர்.
கர்வடம். (௧)

சூத்திரம்.

(௱௨)

பண்டம்பலகொடுபகருங்க
டற்கரை, மன்னும்பதியேபட்
டினமாகும்.

(௱௩) சூ.

பட்டினொச்சியும்பள்ளியுஞ்
சிற்றூர்.

(௱௪) சூ.

குறிச்சிசிறூர் குறிஞ்சிநிலத்
[தூர்.

(௱௫) சூ.

பாடிமுல்லைப்பதி.

(௱௬) சூ.

பட்டினநெய்தற்பதி.

(௱௭) சூ.

முனையிடங்குறும்புமுதுபா
லைநிலத்தூர்.

(௱௮) சூ.

பூக்கங்குடிக்காடுபூரியமுறை
யுள், பாக்கமருப்பமகலுள்பதி
யே, கோட்டம்வசதிதாவளநிய
மம், வாழ்க்கைதண்ணடைமரு
தநிலத்தூர்ப்பெயர்.

(௱௯) சூ.

பாடியும்புரமுநகரப்பதி
[யே.

(௱௰) சூ.

சூழ்கழியிருக்கைகோளுமுக
[மே.

(௱௰௧) சூ.

மருங்கிலூர்சூழ் பெரும்பதி
மடப்பம்.

பெயர்ப்பிரிவு.

பலபண்டம்பகருங் கடற்கரை
யூரின்பெயர்.
பட்டினம். (௧)

சிற்றூரின்பெயர்.
பட்டி-நொச்சி-பள்ளி. ஆ-௩.

குறிஞ்சிநிலத்தூரின்பெயர்.
குறிச்சி-சிறூர். ஆ-௨.

முல்லைநிலத்தூரின்பெயர்.
பாடி. (௧)

நெய்தனிலத்தூரின்பெயர்.
பட்டினம். (௧)

பாலைநிலத்தூரின்பெயர்.
முனையிடம்-குறும்பு. ஆ-௨.

மருதநிலத்தூரின்பெயர்.
பூக்கம்-குடிக்காடு-பூரியம்-
உறையுள்-பாக்கம்-அருப்ப
ம்-அகலுள்-பதி-கோட்டம்-
வசதி-தாவளம்-நியமம்-வாழ்
க்கை-தண்ணடை. ஆ-௰௪.

நகரப்பதியின்பெயர்.
பாடி-புரம். ஆ-௨.

சூழ்கழியிருக்கையின்பெயர்.
கோளுமுகம். (௧)

மருங்கிலூர்சூழ்பெரும்
பதியின்பெயர்.
மடப்பம். (௧)

சூத்திரம்.

(௱௰௨) சூ.
கொடுங்குறும்பரணிருக்கை
குறும்பென்றாகும்.

(௱௧௩) சூ.
பாசறைமுனைமேற் சென்
றோருறைபதி.

(௱௧௪) சூ.
கோழியுறையூர்.

(௱௧௫) சூ.
கூடன்மதுரை.

(௱௧௬) சூ.
*மன்றஞ்சிதம்பரம்.

(௱௧௭) சூ.
*கமலைதிருவாரூர்.

(௱௧௮) சூ.
கருவூர்வஞ்சி.

(௱௰௯) சூ.
காகந்திபுகார்காவிரிப்பூம்ப
ட்டினம்.

(௱௨௰) சூ.
உஞ்சையவந்தி.

(௱௨௧) சூ.
காசிவாரணசி.

(௱௨௨) சூ.
கச்சிகாஞ்சி.

(௱௨௩) சூ.
விதேகை யென்பது மிதிலை
யாகும்.

(௱௨௪) சூ.
விநிதைசாகேதங்கோசலைய
யோத்தி.

பெயர்ப்பிரிவு.

கொடுங்குறும்பரணிருக்
கையின்பெயர்.
குறும்பு. (௧)

முனைமேற்சென்றோரு
றைபதியின்பெயர்.
பாசறை. (௧)

உறையூரின்பெயர்.
கோழி. (௧)

மதுரையின்பெயர்.
கூடல். (௧)

சிதம்பரத்தின்பெயர்.
மன்றம். (௧)

திருவாரூரின்பெயர்.
கமலை. (௧)

கருவூரின்பெயர்
வஞ்சி. (௧)

காவிரிப்பூம்பட்டினத்தி
ன்பெயர்.
காகந்தி-புகார். ஆக ௨.

அவந்தியின்பெயர்.
உஞ்சை. (௧)

காசியின்பெயர்.
வாரணசி. (௧)

காஞ்சியின்பெயர்
கச்சி. (௧)

மிதிலையின்பெயர்.
விதேகை. (௧)

அயோத்தியின்பெயர்.
விநிதை - சாகேதம்- கோச
லை. ஆக ௩.

சூத்திரம்.

(௱௨௫) ——
புரியெனல்கிளவிபுரமென்றா
[கும்.

(௱௨௬) சூ.
பாடியென்பது சேரியாகு
[ம்.

(௱௨௭) சூ.
*காழகங்கடாரமாகக்கூறு
[வர்.

(௱௨௮) சூ.
*சிங்களமீழமாகச்செப்புவர்

(௱௨௯) சூ.
*நெல்லும்புல்லுநிறைந்தமருதகம், புல்லுமலையூர்சம்வாகமாகும்.

(௱௩௰) சூ.
*அரித்துவாரமாயாபுரியாம்.

(௱௩௧) சூ.
கூலமங்காடிகடையாகக்கூறுவர்.

(௱௩௨) சூ.
ஆவணநியமமாகவுமுரைத்
[தே.

(௱௩௩) சூ.
ஆவணம்வீதிதெருவல்மறுகு, கோசநியமமார்க்கந்தெரு
[வே.

(௱௩௪) சூ.
சிறகெனலொருவழிச்செப்பப்படுமே.

(௱௩௫) சூ.
மன்றமார்க்கநியமநெடுந்தெருவே.

பெயர்ப்பிரிவு.

புரியெனும்பெயர்.
புரத்திற்குரித்து. (௧)

பாடியெனும்பெயர்.
சேரிக்குரித்து. (௧)

கடாரத்தின்பெயர்.
காழகம். (௧)

சிங்களத்தின்பெயர்.
ஈழம். (௧)

நெல்லும்புல்லு நிறைந்த மலையூரின்பெயர்.
சம்வாகம். (௧)

அரித்துவாரத்தின்பெயர்.
மாயாபுரி. (௧)

கடையின்பெயர்.
கூலம்-அங்காடி. ௨.

மற்றுங்கடையின்பெயர்.
ஆவணம்-நியமம். ௨.

ஆக-௪.

தெருவின்பெயர்.
ஆவணம்-வீதி-தெருவல்-மறுகு-கோசம்-நியமம்-மார்க்கம். ௭.

மற்றுத்தெருவின்பெயர்.
சிறகு. (௧)

ஆக-௮

நெடுந்தெருவின்பெயர்.
மன்றம்-மார்க்கம்-நியமம்.

ஆக-௩.

சூ பு

குத்திரம்.

(௱௩௬)

குறுந்தெருமறுகே.

(௱௩௭) சூ.

செண்டுவெளிவையாளிவீதி,
பாவிவட்டந்திருமுற்றமாகும்.

(௱௩௮) சூ.

பூரியம்வேந்தர்வீதியாகும்.

(௱௩௯) சூ.

கோணமுடுக்குத்தெருவாகு
ம்மே.

(௱௪௰) சூ.

அந்திமுச்சந்தி.

(௱௪௧) சூ.

அந்திகவலைவரியேசந்தி.

(௱௪௨) சூ.

முந்தையோர்சதுக்கநாற்ச
ந்தியென்ப.

(௱௪௩) சூ.

சேடியும்வாடையுஞ்சிரோணி
யாகும்.

(௱௪௪) சூ.

ஆலிடமெனவுமறையப்படு
மே.

(௱௪௫) சூ.

ஆவேசநமக்கசாலையர்வீதி.

(௱௪௬) சூ.

பக்கணம் வேடர் வீதியாகு
[ம்.

(௱௪௭) சூ.

*சந்துசதுக்கம்.

(௱௪௮) சூ.

சிநகாஞ்சேதிமந்தேவரால
ய,நிலயம்பாழிபள்ளிநிகேதந;

பெயர்ப்பிரிவு.

குறுந்தெருவின்பெயர்.

மறுகு. (௧)

குதிரைவையாளிவீதியின்
பெயர்.

செண்டுவெளி - பாவிவட்ட
ம்-திருமுற்றம். ஆ௩

வேந்தர்வீதியின்பெயர்.

பூரியம். (௧)

முடுக்குத்தெருவின்பெயர்

கோணம். (௧)

முச்சந்தியின்பெயர்.

அந்தி. (௧)

சந்தியின்பெயர்.

அந்தி-கவலை-வரி. ஆ௩.

நாற்சந்தியின்பெயர்.

சதுக்கம். (௧)

சிரோணியின்பெயர்.

சேடி-வாடை. ௨.

மற்றுஞ்சிரோணியின்பெயர்.

ஆலிடம். (௧)

ஆ௩.

அக்கசாலையர்வீதியின்பெயர்

ஆவேசநம். (௧)

வேடர்வீதியின்பெயர்.

பக்கணம். (௧)

சந்தின்பெயர்.

சதுக்கம். (௧)

கோயிலின்பெயர்.

சிநகரம்-சேதிமம்- தேவரா
லயம்- நிலயம்- பாழி- பள்ளி-

சூத்திரம். | பெயர்ப்பிரிவு.

மந்திரமாலயந்தேவகுலங்கோட்டம், நகர்தளிவானவருறையுள் கோயில்.

நிகேதனம்-மந்திரம்-ஆலயம்-தேவகுலம்-கோட்டம்-நகர்-தளி-வானவருறையுள். ஆ ௰௪

(௱௪௯) சூ.
சத்திரஞ்சாலை யறச்சாலையாகும்.

அறச்சாலையின்பெயர்.
சத்திரம்-சாலை. ஆ உ.

(௱௫௰) சூ.
அறப்புறமோதும்பள்ளியாகும்.

ஓதும்பள்ளியின்பெயர்
அறப்புறம். (க

(௱௫௧) சூ.
சமித்தமோமமண்டபஞ்சாரும்.

ஓமமண்டபத்தின்பெயர்.
சமித்தம். (க)

(௱௫௨) சூ.
சாலைமாளிகைபவநங்கோயிற்; குலமுமன்னரில்லாகக்கூறுவ[ர்.

மன்னரில்லின்பெயர்.
சாலை - மாளிகை - பவநம். கோயில்-குலம். ஆ ௫.

(௱௫௩) சூ.
கந்தவாரமுமுவளகமுமந்தப், புரமுந்தேவியர்மனையாகுமென்ப.

மன்னன்றேவியிருக்கையின் பெயர்.
கந்தவாரம்-உவளகம்-அந்தப்புரம். ஆ ௩.

(௱௫௪) சூ.
மாடமனையுறையுள்புக்கில்பதிவசதி, யிடமேபாத்திய கம்மயினில்ல, மிடவகை சேர்வுவீடென்றிசைப்பர்.

வீட்டின்பெயர்.
மாடம்-மனை-உறையுள்-புக்கில்-பதி-வசதி-இடம்-பாத்தி-அகம்-மயின்-இல்லம்-இடவகை-சேர்வு. ஆ ௰௩.

(௱௫௫) சூ.
கூரை குரம்பை குடில்சிற்றிலாகும்.

சிற்றிலின்பெயர்.
கூரை-குரம்பை-குடில். ஆ ௩.

(௱௫௬) சூ.
புனைகலனிருக்கை பண்டசா[லை.

பண்டசாலையின்பெயர்.
புனைகலனிருக்கை. (க)

(௱௫௭) சூ.
வளவியினறையேவீட்டிறப்பாகும்.]

வீட்டிறப்பின்பெயர்.
வளவி-இறை. ஆ உ.

சோ ச்சா

சூத்திரம்.

(௱௫௮)
சோபாநந்தாழ்வாரமாகும்.

(௱௫௯) சூ.
விடங்கமுகடே.

(௱௬௰) சூ.
வேயுள்வேய்தல்.

(௱௬௧) சூ.
சாலகஞ்சாளரநாழைசாலேகம்,வாதாயநம்பல்கணியெனப்படுமே.

(௱௬௨) சூ
அட்டிலடுக்களை மடைப்பள்ளியாகும்.

(௱௬௩) சூ.
கல்வியூரிகல்லூரியாகும்.

(௱௬௪) சூ.
பித்திகைசுவர்த்தலம்.

(௱௬௫) சூ.
பீடிகைபீடம்.

(௱௬௬) சூ.
அங்கணத்தூம்புவாய்சலதாரையாகும்.

(௱௬௭) சூ.
முன்றிலங்கணமுற்றமாகும்.

(௱௬௮) சூ.
ஆமியநிலாமுற்ற மாகுமென்ப.

(௱௬௯) சூ.
திட்டைமண்ணீடுதெற்றிவேதிகை, திண்ணையாகுமென்மனார்புலவர்.

பெயர்ப்பிரிவு.

தாழ்வாரத்தின்பெயர்
சோபாநம். (க)

முகட்டின்பெயர்.
விடங்கம். (க)

வேயுளின்பெயர்.
வேய்தல். (க)

பல்கணியின்பெயர்.
சாலகம்-சாளரம்-நாழை-சாலேகம்-வாதாயநம். ஆ ௫.

மடைப்பள்ளியின்பெயர்.
அட்டில்-அடுக்களை. ஆ ௨.

கல்வியூரி-அன்றிக்கல்விபயிலிடத்தின்பெயர்.
கல்லூரி. (க)

சுவர்த்தலத்தின்பெயர்.
பித்திகை. (க)

பீடத்தின்பெயர்.
பீடிகை. (க)

சலதாரையின்பெயர்.
அங்கணம்-தூம்புவாய். ஆ ௨.

முற்றத்தின்பெயர்.
முன்றில்-அங்கணம் ஆ ௨.

நிலாமுற்றத்தின்பெயர்.
ஆமியம். (க)

திண்ணையின்பெயர்.
திட்டை-மண்ணீடு-தெற்றி-வேதிகை. ஆ ௪.

சூத்திரம்.

(ௗஎ௰)
கற்படுத்தபூமிகுட்டிமமாகு
[ம்.

(ௗஎக) சூ.
தெற்றியம்பலஞ் சித்திரகூ
டம்.

(ௗஎஉ) சூ.
பொதியிலு மன்றமும் பொ
துவுமம்பலம்.

(ௗஎ௩) சூ.
செல்ல நீர்க்கும் பல்புகழ்ச்
சேந்தனில், வல்லுநர் நாவலர்
வாய்ந்தவிடமு,மல்லுஞ்சூதும்
படையுமற்றுங், கல்விபயில் க
ளமுங்கழகமாகும்.

(ௗஎச) சூ.
ஆசிருக்கைப்பெயரத் தா
ணிவேத்தவை.

(ௗஎரு) சூ.
போரினிடமும் வட்டாடிட
மு, மாடலிடமுமவையுமரங்க
[ம்.

(ௗஎசா) சூ.
ஒருசிறைதுச்சில்.

(ௗஎஎ) சூ.
ஒருவந்தமேகாந்தங்கொட்
டில்வேறிடம்.

(ௗஎஅ) சூ.
சுருங்கைகற்படையாகுமெ
ன்ப.

(ௗஎகூ) சூ.
ஆகரம்பிறப்பிடமுறைவிட
மாகும்.

பெயர்ப்பிரிவு.

கற்படுத்தபூமியின்பெயர்.
குட்டிமம். (க)

சித்திரகூடத்தின்பெயர்.
தெற்றியம்பலம். (க)

அம்பலத்தின்பெயர்.
பொதியில் - மன்றம் - பொ
து. ஆ௲ ௩.

கழகமெனும்பெயர்.
வல்லுநருநாவலருஞ்சேரிட
த்திற்கு மல்லுஞ்சூதும் படை
யுங் கல்வியும் பயிலிடத்திற்கு
முரித்து.

ஆசிருக்கையின்பெயர்.
அத்தாணி - வேத்தவை.
ஆ௲ உ.

அரங்கமெனும்பெயர்.
போரினிடத்திற்கும் - வட்
டாடிடத்திற்கும் - ஆடலிடத்தி
ற்கும் - அவைக்குமுரித்து.

ஒருசிறை - அல்லது - ஒதுக்கிட
த்தின்பெயர்.
துச்சில். (க)

ஏகாந்தத்தின்பெயர்.
ஒருவந்தம் - வேறிடம் - கொட்
டில். ஆ௲ ௩.

கற்படையின்பெயர்.
சுருங்கை. (க)

உறைவிடத்தின்பெயர்.
ஆகரம் - பிறப்பிடம். ஆ௲ உ.

சூத்திரம்.	பெயர்ப்பிரிவு.
(௱அங) ——— குமுதஞ்சுல்லிகாமரமடுப்பு, முத்தாநமெனவுமொழியப்படுமே.	அடுப்பின்பெயர். குமுதம் - சுல்லி - காமரம் - முத்தாநம். ஆ௳ ச.
(௱அச) சூ. குடம்பைபஞ்சரங்கட்சிகூடாகும்.	கூட்டின்பெயர். குடம்பை - பஞ்சரம் - கட்சி. ஆ௳ ௩.
(௱அ௨) சூ. குலாயநம்பஞ்சரம்பண்ணுங்கூடே.	பண்ணுங்கூட்டின்பெயர். குலாயநம் - பஞ்சரம். ஆ௳ ௨.
(௱அ௩) சூ. மந்திரஞ்சாலை குதிரைப்பந்தி.	குதிரைப்பந்தியின்பெயர். மந்திரம் - சாலை. ஆ௳ ௨.
(௱அசு) சூ. நீடியவாரியுஞ் சேவகமுந்தண்டமுங், கூடமுமொளியும் யானைசேர்விடம்.	யானைசேர்விடத்தின்பெயர். வாரி - சேவகம் - தண்டம் - கூடம் - ஒளி. ஆ௳ ரு.
(௱அரு) சூ. தண்டம்யானைசெல்வழியென்ப.	யானைசெல்வழியின்பெயர். தண்டம். (க)
(௱அசு) சூ. சேவகம் யானைத் துயிலிடமாகும்.	யானைத்துயிலிடத்தின்பெயர். சேவகம். (க)
(௱அஎ) சூ. கட்சியமளிசேக்கையுறையுள், சட்டகஞ் சேர் விடம்பள்ளி சயநம், பட்டம்பாழிபாயலரி துயிலிட, மொட்டிய வுயர்திணைக்கிடப்பிடமாகும்.	[illegible]க்கட்கிடப்பிடத்தின்பெயர். கட்சி - அமளி - சேக்கை - உறையுள் - சட்டகம் - சேர்விடம் - பள்ளி - சயநம் - பட்டம் - பாழி - பாயல் - அரி - துயிலிடம். ஆ௳ ௰௩.
(௱அஅ) சூ. பட்டம்போத்துப் பண்ணை சேக்கை விலங்கு துயிலுமிடமாகும்மே.	விலங்குதுயிலிடத்தின் பெயர். பட்டம் - போத்து - பண்ணை சேக்கை. ஆ௳ ச.
வே	வே

சூத்திரம்.	பெயர்ப்பிரிவு.
(௱அகூ) —— வேதியு நித்தமும் வேள்விக் குண்டம்.	வேள்விக்குண்டத்தின்பெயர். வேதி-நித்தம். ஆ௨.
(௱கூ௰) சூ. தாபதம்பாழி கரண்டைபள்ளி,முநிவர்வாசமென மொழியப்படுமே.	முநிவர்வாசத்தின்பெயர். தாபதம்-பாழி-கரண்டை-பள்ளி. ஆ௪.
(௱கூக) சூ. சுள்ளையுஞ்சூளையு மட்கலஞ் சுடுமிடம்.	மட்கலஞ்சுடுமிடத்தின்பெயர். சுள்ளை-சூளை. ஆ௨.
(௱கூ௨) சூ. சுடுகாடீமமயானஞ்சுடலை,சுடுநிலம்புறங்காடிடுகாடுமுதுகாடு, வநமெரி வநம்பிதிர் வநம்பிணக்காடே.	சுடுகாட்டின்பெயர். ஈமம்-மயானம்-சுடலை-சுடுநிலம்-புறங்காடு-இடுகாடு-முதுகாடு-வநம்-எரிவநம்-பிதிர்வநம்-பிணக்காடு. ஆ௰க.
(௱கூ௩) சூ. களரிபறந்தலை செம்புலம் படுகளம், பொருகளங் களமெனப்புகன்றனர்புலவர்.	பொருகளத்தின்பெயர். களரி-பறந்தலை-செம்புலம்-படுகளம்-களம். ஆ௫.
(௱கூ௪) சூ. அருப்ப மாரிடமஞரிழுக்கு வழுக்குநிலம்.	வழுக்குநிலத்தின்பெயர். அருப்பம்-ஆரிடம்-அஞர்-இழுக்கு. ஆ௪.
(௱கூ௫) சூ. தொழுவமாவேலிதோழமானிலையே.	தொழுவத்தின்பெயர். ஆவேலி-தோழம்-ஆனிலை. ஆ௩.
(௱கூ௬) சூ. இஞ்சிநொச்சியெயில்சுற்றுப்புரிசை, பந்தம்வளைப்புக் காப்பரண்காவ,லாரலோதைபிராகாரம்வேலி, சீர்சாலம் வேணைகைமதிலெனச்செப்புவர்.	மதிலின்பெயர். இஞ்சி-நொச்சி-எயில்-சுற்று-புரிசை-பந்தம்-வளைப்பு-காப்பு-அரண்-காவல்-ஆரல்-ஓதை-பிராகாரம்-வேலி-சாலம்-வேணைகை. ௰௬.
(௱கூ௭) சூ. வன்சிறையுவுளகமாகலும்வளையார்.] ப	மற்றுமதிலின்பெயர். வன்சிறை-உவளகம். ௨. ஆ௰அ

சூத்திரம்.

(௱௯௮)

பரிகமகப்பாப் பதணமூன்று,முரியமதிலுளுயர்மேடைக்கே.

(௱௯௯) சூ.

தொடையுந்தகைப்பும்வாரியுஞ்சுற்றே.

(௨௱) சூ.

பதப்பாடெந்திரங் கோசந்தோணி,விதப்புஞாயிலுஞ் சின்மதிலுறுப்பே.

(௨௱௧) சூ.

அகழிகிடங்ககப்பாப்பரிகமகழே.

(௨௱௨) சூ.

புகல்குதிராகும்.

(௨௱௩) சூ.

தோட்டிதுவாரம்வாரிகடைவாயில்.

(௨௱௪) சூ.

சிகரிகோபுரம்.

(௨௱௫) சூ.

கோபுரமென்பது பெருவாயிலாகும்.

(௨௱௬) சூ.

புதவுவாயிற் புகுபெரும் புழையே.

(௨௱௭) சூ.

அளிந்த மவ்வழிச்சார்திண்ணையாகும்.

(௨௱௮) சூ.

அத்திரகம்வாயிற்படிச்சுருளாகும்.

பெயர்ப்பிரிவு.

மதிலுளுயர்மேடையின்பெயர்.

பரிகம்-அகப்பா-பதணம். ஆ. ௩.

மதிற்சுற்றின்பெயர்.

தொடை- தகைப்பு - வாரி. ஆ. ௩.

மதிலுறுப்பின்பெயர்.

பதப்பாடு-எந்திரம்- கோசம்-தோணி-விதப்பு- ஞாயில்-நாஞ்சில். ஆ. ௭.

அகழின்பெயர்.

அகழி-கிடங்கு - அகப்பா-பரிகம். ஆ. ௪.

குதிரின்பெயர்.

புகல். (௧)

வாயிலின்பெயர்.

தோட்டி- துவாரம்-வாரி-கடை. ஆ. ௪.

கோபுரம் - அல்லது கோபுரநிலையின்பெயர்.

சிகரி. (௧)

பெருவாயிலின்பெயர்.

கோபுரம். (௧)

கோபுரவாயிலிற்புகுபுழையின்பெயர்.

புதவு. (௧)

கோபுரவாயிற்றிண்ணையின்பெயர்.

அளிந்தம். (௧)

கோபுரவாயிற்படிச்சுருளின்பெயர்.

அத்திரகம். (௧)

சூத்திரம்.

(உ௱௯) ——

விளையுளும் பண்ணையுஞ் செய்யுங்கழனியுந், தடியும்பாத்தியுஞ்செறுவும்வயலே.

(உ௱௰) சூ.

குண்டில்பாத்திசிறுசெய்யாகும்.

(உ௱௧௧) சூ

குறிஞ்சிநிலச்சார் புங்கொல்லையும்புனமே.

(உ௱௧௨) சூ.

ஏனலும்வளாக முந்தினைப்புனமென்ப.

(உ௱௧௩) சூ.

முதைப்புனம் பழைங் கொல்லை.

(உ௱௧௪) சூ.

இதைப்புனம்புதுக்கொல்லை.

(உ௱௧௫) சூ.

தோட்டந்துடவைபடப்பையிம்மூன்றுந், தோட்டப்பெயரெனச் சொல்லினர்புலவர்.

(உ௧௬) சூ.

துடவை தொய்யி லுழவின்பெயரே.

(உ௱௧௭) சூ.

தொடுப்பேயுழ்வோர்தொழில்வளைப்பாகும்.

(உ௱௧௮) சூ.

மரிசிபுதுவரம்பு.

(உ௱௧௯) சூ.

வன்மீகம்புற்று.

பெயர்ப்பிரிவு.

வயலின்பெயர்.

விளையுள் - பண்ணை - செய்-கழனி-தடி-பாத்தி-செறு. ஆ. ௭.

சிறுசெய்யின்பெயர்.

குண்டில்-பாத்தி. ஆ. ௨.

புனத்தின்பெயர்.

குறிஞ்சிநிலச்சார்பு- கொல்லை. ஆ. ௨.

தினைப்புனத்தின்பெயர்.

ஏனல்-வளாகம். ஆ. ௨.

பழங்கொல்லையின்பெயர்.

முதைப்புனம். (௧)

புதுக்கொல்லையின்பெயர்.

இதைப்புனம். (௧)

தோட்டத்தின்பெயர்.

தோட்டம்-துடவை-படப்பை. ஆ. ௩.

உழவின்பெயர்.

துடவை-தொய்யில். ஆ. ௨.

உழுதொழில்வளைப்பின்பெயர்.

தொடுப்பு. (௧)

புதுவரம்பின்பெயர்.

மரிசி. (௧)

புற்றின்பெயர்.

வன்மீகம். (௧)

சூத்திரம்.

(உஉ௰) ———

கங்குவரம்பாருமே.

(உஉக) சூ.

உவளகம்பயம்பேயவல் குழிதாழ்வே,யிழிவுகிழக்குப்படுகர்பள்ளம்.

(உஉஉ) சூ.

குரும்பிபுற்றஞ்சோறே.

(உஉங) சூ.

களரிகரம்பே பெரும்பாழ் முதுநிலம்.

(உஉச) சூ.

சரிநெறியொழுக்கந் தாரையாறு, வதியதர்மார்க்கமியவை நடவை, பதவைசெப்பமயநமிடவை, வாரிவட்டைவரிவயவை வகுந்து, செலவுசிறுபதம் வழிக்கிளவியாகும்.

(உஉரு) சூ.

அத்தங்கடங்கடறுதாம்புசுரமருநெறி.

(உஉசா) சூ.

கவலைகவர்த்த நெறியெனக் கருதுவர்.

(உஉஎ) சூ.

விடங்கர் சிறுவழி யாகுமென்ப.

(உஉஅ) சூ.

*பாதைபெருவழி.

(உஉகூ) சூ.

படுகர்மடுவிழிந் தேறப்படு நெறி.

ஆ

பெயர்ப்பிரிவு.

வரம்பருகின்பெயர்.

கங்கு. (க)

பள்ளத்தின்பெயர்

உவளகம் - பயம்பு - அவல் - குழி - தாழ்வு - இழிவு - கிழக்கு - படுகர். ஆ அ.

புற்றஞ்சோற்றின்பெயர்.

குரும்பி. (க)

முதுநிலத்தின்பெயர்.

களரி - கரம்பு - பெரும்பாழ். ஆ ௩.

வழியின்பெயர்.

சரி - நெறி - ஒழுக்கம் - தாரை ஆறு - வதி - அதர் - மார்க்கம் - இயவை - நடவை - பதவை - செப்பம் - அயநம் - இடவை - வாரி - வட்டை - வரி - வயவை - வகுந்து - செலவு - சிறுபதம். ஆ உக.

அருநெறியின்பெயர்.

அத்தம் - கடம் - கடறு - தாம்பு - சுரம். ஆ ரு.

கவர்த்தநெறியின்பெயர்.

கவலை. (க)

சிறுவழியின்பெயர்.

விடங்கர். (க)

பெருவழியின்பெயர்.

பாதை. (க)

இழிந்தேறப்படுவழியின் பெயர்.

படுகர் - மடு. ஆ உ.

ஆ

சூத்திரம்.

(உ௩௰)

ஆரோகணஞ்சோபாநங்கற்படி.

(உ௩க) சூ.

அளக்கர்நீள்வழியே.

(உ௩உ) சூ.

வாய்புலம்பாங்கர் வயின்களம்வைப்புத், தேயம்வழியுழி திணையேமருங்கு, பானிலந் தலமேவளாகம்பட்டி, சூழருநமிடப்பெயர்த்தொடர்பே.

(உ௩௩) சூ.

கண்கால்புறமகமுள்ளுழை கீழ்மேல், பின்சாரயல்புடை தேவகையெனாஅ, முன்னிடை கடைதலைவலமிடமெனாஅ, அன்னபிறவுமதன்பாலவென்மனார்.

(உ௩ச) சூ.

மாடுசிறையுழிமருங்குஞாங்கர்முன், பால்புடைபாங்கர்பக்கமாகும்.

(உ௩ரு) சூ.

நனந்தலை நாப்பண் மத்திமநள்ளு,வயங்கிடை யொத்த னவோடணவு,நலந்திகழ்கூழையுநடுவென்றாகும்.

(உ௩சா) சூ.

உம்பர்மீப்புலம்வலமே *யோக்கந்,துங்கமுவணம் பருமமுந்தி,மேடுமோடுதூக்கு மேக்கு, நிவப்பிவையுயர்ச்சியாக நிகழ்த்துவர்.]

பெயர்ப்பிரிவு.

கற்படியின்பெயர்.

ஆரோகணம்- சோபாநம். ஆ. உ.

நீள்வழியின்பெயர்.

அளக்கர். (க)

இடத்தின்பெயர்.

வாய்-புலம்-பாங்கர்-வயின்-களம்-வைப்பு-தேயம்-வழி-உழி-திணை-மருங்கு-பால்-நிலம்-தலம்-வளாகம்-பட்டி-சூழல்-தாநம். ௰அ.

மற்றுமிடப்பொதுப்பெயர்.

கண்-கால்-புறம்-அகம்-உள்-உழை-கீழ்-மேல்-பின்-சார்-அயல்-புடை-+தேவகை-முன்-இடை-கடை-தலை-வலம்-இடம். ௰கூ.

ஆ. ௩௭.

பக்கத்தின்பெயர்.

மாடு-சிறை-உழி-மருங்கு-ஞாங்கர்-முன்-பால்-புடை-பாங்கர். ஆ. கூ.

நடுவின்பெயர்.

நனந்தலை-நாப்பண்-மத்திமம்-நள்-இடை-ஒத்தல்-நாஅணவு-கூழை. ஆ. கூ.

உயர்ச்சியின்பெயர்.

உம்பர்-மீப்புலம்-வலம்-ஒக்கம்-துங்கம்-உவணம்-பருமம்-உந்தி-மேடு-மோடு-தூக்கு-மேக்கு-நிவப்பு. ஆ. ௰௩.

ஞா

*ஊக்கம்-என்பதூஉம்பாடம்.]

+தேவகை-என்பதுதிசைக்கூறு.

சூத்திரம்.

(உ௩௭) ——
ஞாங்கர்முன்னுமேலுமாகு
[ம்.

(உ௩௮) சூ.
முதலுந்தலைத்தாளு முன்ன
ராகும்.

(உ௩௯) சூ.
இம்பரிவனே.

(உ௪௰) சூ.
உம்பருவனே.

(உ௪௧) சூ.
ஆண்டவ்விடம்.

(உ௪உ) சூ.
ஈண்டிவ்விடம்.

(உ௪௩) சூ.
எல்லைகுரோசங்கூப்பிடு தூர
[ம்.

(உ௪௪) சூ.
கிரவுஞ் சங்கோழிப் பறவை
யளவாகும்.

(உ௪௫) சூ.
புகையோசனையாம்.

(உ௪௬) சூ.
காவதங்காதமாகக்கருதுவர்

பெயர்ப்பிரிவு.

ஞாங்கரெனும்பெயர்.
முன்னிடத்திற்கு மேலிடத்
திற்குமுரித்து.

முன்னரின்பெயர்.
முதல்-தலைத்தாள். ஆ உ.

இம்பரெனும்பெயர்.
இவனென்பதற்குரித்து.

உம்பரெனும்பெயர்.
உவனென்பதற்குரித்து.

ஆண்டெனும்பெயர்.
அவ்விடத்திற்குரித்து.

ஈண்டெனும்பெயர்.
இவ்விடத்திற்குரித்து.

கூப்பிடுதூரத்தின்பெயர்.
எல்லை-குரோசம். ஆ உ.

கோழிப்பறவையளவின்பெய
கிரவுஞ்சம். (க)] [ர்.

யோசனைதூரத்தின்பெயர்.
புகை. (க)

காதத்தின்பெயர்.
காவதம். (க)

திவாகரவரலாற்றின்பெயர்.

ஒருவற்கொருவ னாகியுதவியும், பரிசின்மாக்கள்
பற்பலராயினுந், தானொருவன்னே தானிமாநவன்
செந்தமிழ்ச்சேந்தன், றெரிந்ததிவாகரத், தைந்தா
வதிடப்பெயர்த்தொகுதி.

மூற்றிற்று.

ஆறாவது.

பல்பொருட்பெயர்த்தொகுதி

(௧) சூ.

ஆடகமாசையீழமேமமா
கோணங் கநகத்தமநியம், வெ
றுக்கைசொன்னம்பொருளோ
டரியே,யீகைநிதியேகருந்தந
ங்காஞ்சநம்,பீதகமாடைதொ
டுக்கமருத்தஞ், சாமீகரம் பூரி
சந்திரமாழை, நிதாநந் தேசிக
ஞ் செந்தாதுவித்தந்,திராவியம்
வேங்கைசாம்பூநதமுறை,சாத
ரூபம்முடல்பண்டமிரணியம்,
பொலமென்றின்னவைபொன்
னெனப்படுமே.

பொன்னின்பெயர்.

ஆடகம்-மாசை-ஈழம்-ஏமம்-மாரி-காணம்-கநகம்-தமநியம்-வெறுக்கை-சொன்னம்-பொருள்-அரி-ஈகை-நிதி-தநம்-காஞ்சநம்-பீதகம்-மாடை-தொடுக்கம்-அருத்தம்-சாமீகரம்-பூரி-சந்திரம்-மாழை-நிதாநம்-தேசிகம்-செந்தாது-வித்தம்-திராவியம்-வேங்கை-சாம்பூநதம்-உறை-சாதரூபம்-உடல்-பண்டம்-இரணியம்-பொலம். ஆ ௩௭.

(௨) சூ.

பொன்னும்வெள்ளியுஞ்செ
ம்புமிரும்பு, மன்னவீயமுமை
வகையுலோகம்.

ஐவகையுலோகமாவன.

பொன்-வெள்ளி-செம்பு-இரும்பு-ஈயம். ஆ ௫.

(௩) சூ.

தராவொடு கஞ்சந் தானுங்
கூட்டி, யெழுவகையுலோக
மென்னவும்படுமே.

எழுவகையுலோகமாவன.

ஐவகையோடு-தரா-கஞ்சம். ௨.

ஆ ௭.

(௪) சூ.

நவமணிகடவுண்மணி யென்
றிவற்றி, னிகழ்பெயர் நிதியுநி
தாநமுமென்ப.

* நவமணியின்பெயர்.

நிதி. (௧)

கடவுண்மணிக்குப்பெயர்.

நிதாநம். (௧)

---

* நவமணிக்குங்கடவுண்மணிக்கும்பெயர்.
நிதி-நிதாநம். ஆ ௨. எனப்பிரிப்பினுமமையும்.

சூத்திரம்.

(ரு)

*காணம்பொற்காசே.

(சா) சூ.

மனவுங்காசுமணியின்பொது
ப்பெயர்.

(எ) சூ.

ஆதநஞ்சலாகையகன்மணி
க்காகும்.

(அ) சூ.

மாமணிபதுமராகமாணிக்
கம்.

(கூ) சூ.

நித்திலந்தாளமாரமுத்தே.

(ய) சூ.

தாளந்திரட்சி யாகவுஞ்சாற்
றுவர்.

(கக) சூ.

வித்துருமந்துகிர் துப்பே
யரத்த,மொத்தபிரவாளந்துவ
ரிவைபவளம்.

(கஉ) சூ.

*அரிபச்சைமரகதமரதகமு
மாகும்.

(கங) சூ.

